**தலைப்பு 426 - உர உற்பத்தி மற்றும் வழங்கல்கள், இரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினி பாவனை ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

உர உற்பத்தி மற்றும் வழங்கல்கள், இரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினி பாவனை ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் உர உற்பத்தி மற்றும் வழங்கல்கள், இரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினி பாவனை ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கிய பொழிப்பறிக்கை 2021 செப்தெம்பர் 03 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 நவம்பர் 26 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

உர உற்பத்தி மற்றும் வழங்கல்கள், இரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினி பாவனை ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சின் நிதிக் கூற்றுக்களினுள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல்,தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1) (ஈ) பிரிவின் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மீளாய்வாண்டில் ஸ்தாபிக்கப்பட்ட அமைச்சு என்பதனால் முன்னைய ஆண்டிற்கு தொடர்புடையதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு காணப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 ஆதனம் பொறி மற்றும் உபகரணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| **(அ)** நிதி நிலைமை கூற்றினுள் உள்ளடக்கப்பட்டுள்ள ஆதனம் பொறி உபகரணம் மற்றும் அது தொடர்பான ஆதனம் பொறி மற்றும் உபகரணம் ஒதுக்க கணக்கின் மீதிகள் இடையில் ரூபா 126,000 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | மதிப்பிற்குரிய அமைச்சரின் உத்தியோகப்பூர்வ இல்லம் மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்காக பொறியியலாளர் உறுதி செய்த விலைப்பட்டியல் பெறுமதி ரூபா 1,050,000 ஆக காணப்படுகின்றதுடன், அத் தொகை ஆதனம் பொறி மற்றும் உபகரண செலவின கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. அப் பெறுமதியில் ரூபா 126,000 ஆன நிறுத்தல் பண வைப்பு ஒப்பந்தத்திற்காக நிறுத்தல் பண வைப்பு (6000-0-0-16-0-148) கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது. எஞ்சிய ரூபா 924,000 ஆன தொகை ஒப்பந்தக்காரருக்கு பணத்தினால் செலுத்தப்பட்ட பெறுமதியாகும். அதன் பிரகாரம் நிறுத்தல் பண வைப்பு கணக்கின் பெறுமதி ஆதனம் பொறி மற்றும் உபகரண ஒதுக்க கணக்கிற்கு உள்ளடக்கப்படமாட்டாது. | நிதிக் கூற்றுக்களில் தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ளல் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பதிவேட்டின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 2,518,660 ஆக காணப்படினும் நிதி கூற்றுக்களினுள் நடைமுறையல்லாச் சொத்துக்கள் ரூபா 3,732,662 ஆக குறிக்கப்பட்டமையின் காரணத்தினால் ரூபா 1,214,002 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | மதிப்பிற்குரிய அமைச்சரின் உத்தியோகப்பூர்வ இல்லம் மறுசீரமைப்பு மற்றும் மேம்பாடு செய்யப்படுகின்ற காரணத்தினால் அது நிலையான சொத்து பதிவேட்டிற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மதிப்பிற்குரிய அமைச்சருக்கு வழங்கப்பட்ட கைத்தொலைப்பேசியின் பெறுமதி கைத் தவறலாக நிலையான சொத்து பதிவேட்டிற்கு உள்ளடக்கப்படுவதற்கு முடியாதமையினால் இந்த வேறுபாடு காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் அமைச்சின் இன்வெண்ரி பதிவேட்டிற்கு கைத்தொலைப்பேசி உள்ளடக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 38,209,600,000 ஆன தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 1,372,082,993 ஆன தொகை மீளாய்வாண்டினுள் எஞ்சியிருந்தது. | கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக மதிப்பிடல். |
| (ஆ) | 06 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த பெறுமதி ரூபா 1,650,000 ஆன நிதியேற்பாடு முழுமையாக எஞ்சியிருந்தது. | 2020 ஆகஸ்ட் 09 ஆம் திகதி அதி மேதகு சனாதிபதியினால் அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் தலைப்பு 426 உர உற்பத்தி மற்றும் வழங்கல்கள், இரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினி பாவனை ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சு ஆரம்பிக்கப்பட்டது. அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட புதிய அமைச்சென்பதனால் பாதீடு முன்கணிக்கப்படும் போது கடந்த ஆண்டுகளின் செலவினங்கள் தொடர்பாக தகவல் காணப்படாமையின் காரணத்தினால் சில சில செலவு விடயங்களில் எஞ்சி காணப்பட்டிருந்தது. | -மேற்படி- |
| (இ) | 09 செலவு விடயங்களில் 30 சதவீதம் தொடக்கம் 98 சதவீதம் வரையான வீச்சில் நிதியேற்பாடு ரூபா 2,614,191 எஞ்சியிருந்தது | | -மேற்படி- |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகளுக்கு உட்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள |
|---|---|---|
| நி.பி 94 பிரகாரம் பொறுப்பு எப்போதும் நிதியேற்பாட்டினை விஞ்சக்கூடாதிருப்பினும் மீளாய்வாண்டில் 12 செலவு விடயங்களின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாட்டினை விஞ்சி ரூபா 1,112,692,349 ஆன பொறுப்புக்களுக்கான கடப்பாடுகளுக்கு உட்பட்டிருந்தது. | 2020 திசெம்பர் மாதம் வரை செலுத்தல்கள் கமத்தொழில் அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்பட்டது. இந்த அமைச்சின் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது திசெம்பர் மாத்திலாவதுடன், 2021 ஆம் ஆண்டிற்கு தொடர்புடைய செலுத்தவேண்டிய விலைப் பட்டியல்கள் மற்றும் பற்றுச் சீட்டுக்களின் பெறுமதி கடப்பாடுகளுக்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த நிலை 2020 ஆம் ஆண்டின் செலவு விடயங்களின் மிகுதி தேறிய நிதியேற்பாட்டிற்கு சமனாக காணப்படாமை பிரயோகமாக ரீதியாக ஏற்படுகின்ற நிலையாகும். | எஞ்சிய நிதியேற்பாடு பெறுமதியை விஞ்சி பொறுப்புக்களுக்கான கடப்பாடுகளுக்கு உட்படல் கூடாது. |

### 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

| அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 1646 ஆம் நிதி பிரமாணம் | அமைச்சிற்கு சொந்தமான வாகனங்களுக்கு தொடர்பான நாளாந்த ஓட்ட குறிப்புக்கள் பயணங்கள் தொடர்பான மாதாந்த சுருக்கத்தின் அசல் பிரதியுடன் அவ்வவ் மாதத்தின் நாளாந்த ஓட்ட குறிப்புக்கள் அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாரள் தலைமை அதிபதிக்கு முன்வைக்கப்பட வேண்டியிருப்பினும் அமைச்சிற்கு சொந்தமான 28 வாகனங்களுக்கு தொடர்பான ஓட்ட குறிப்புக்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் காணப்பட்ட கொவிட் -19 நிலையின் கீழ் உத்தியோகத்தர்கள் அழைத்தல் மட்டுப்படுத்தப்பட்டதுடன், அதனால் இவ்வாறான குறைப்பாடுகள் ஏற்பட்டிருப்பினும் எதிர்காலத்தில் இவ்வாறான குறைகள் ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படுமென தயவுடன் தெரிவிக்கின்றேன். | நி.பி 1646 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |